2001 ஜனவரி 23]

அரித்துக்கொண்டு ஓடுகிறது. எனவே, வீராணம் திட்டத்தின்கீழ் செய்யப்பட்ட பைப்புகள் பயனில்லாமல் இருக்கின்ற நிலையில், அவற்றை அந்தத் துறையிலிருந்து விலைக்குப் பெற்று, அந்தப் பகுதியிலே பதித்து பாலம் அமைத்துத் தந்தால் மழைக் காலங்களில் எந்தவிதமான இடையூறும் இல்லாமல் போக்குவரத்து நடைபெற வசதியாக இருக்கும். அதுமட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய சேத்தியாத்தோப்பு சர்க்கரை ஆலையின் அருகில் இருக்கக்கூடிய பாலம் மிகக் குறுகலாக இருக்கின்ற காரணத்தினாலே அடிக்கடி அங்கே போக்குவரத்துத் தடை ஏற்படுகிறது. எனவே, இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து புதிதாக ஒரு பாலம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா? அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி-கும்பகோணம்-தஞ்சாவூர் சாலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இடத்தில் மூன்று பள்ளமான பகுதிகள் இருக்கின்றன. அவற்றில் அடிக்கடி நீர்ப் போக்குவரத்து ஏற்படுகிறது என்பது உண்மைதான். இன்னொரு பாலம் மிகவும் குறுகலாக இருக்கிறது என்பதும் உண்மைதான். எனவே, இவற்றை எல்லாம் மாற்றிக் கட்டுவதற்கு உடனடியாக 10 கோடி ரூபாய்க்கு மேல் நிதி தேவைப்படுகிறது. என்றாலும், இந்தச் சாலையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, எதிர்காலத்தில் இதற்கு முன்னுரிமை கொடுத்துப் பரிசீலிக்கலாம் என்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது. இப்போது இருக்கக்கூடிய நிதி நெருக்கடியில் இதை உடனடியாகச் செய்ய இயலாத நிலையும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 33, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

33—

தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை

***10867—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 23

(அ) வெளி மாநிலங்களில் வாழும் தமிழ் அறிஞர்கள் மற்றும் கலைஞர்களுக்கு விருது மற்றும் உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) வெளி மாநிலங்களில் வாழும் தமிழ் அறிஞர்களுக்கு விருது, உதவித் தொகை மற்றும் கலைஞர்களுக்கு கலைமாமணி விருது அரசின் நடைமுறையில் உள்ள திட்டங்கள் வாயிலாக வழங்கப்பெற்று வருகின்றன.

(ஆ) தகுதியுடைய தமிழறிஞர்களைப் போற்றும் வகையிலும் அவர்களுடைய பணிகளைப் பின்வரும் சமுதாயமும் பின்பற்றிடும் வகையிலும் தமிழ் அறிஞர்களுக்கு விருது மற்றும் உதவித் தொகை வழங்கப்பெற்று வருகிறது. அவ்வாறு விருதும், உதவித் தொகையும் வழங்குகிறபோது, பெறுகிறவரின் தகுதியும், தமிழ்த் தொண்டும்தான் கருதிப் பார்க்கப்படுகிறதே தவிர, அவர் தமிழ்நாட்டுக்காரராக இருக்க வேண்டுமென்ற கட்டுப்பாடு இல்லை. இதேபோன்று, வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் வாழும் தமிழ்க் கலைஞர்களுக்கும் 'கலைமாமணி' விருது வழங்கப்பட்டு வருகிறது.

திரு. கொ.வீ. நன்னன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா தமிழ் அறிஞர்களுக்கும், கலை விற்பன்னர்களுக்கும் விருது வழங்கி நமது அரசுதான் பெருமைப்படுத்தி வருகிறது. அதைப்போலவே, அவர்கள் ஊக்கமும், உற்சாகமும் அடைய இன்னும் பல அறிஞர்களை அடையாளம் கண்டு, கலை விற்பன்னர்களை அடையாளம் கண்டு, விருதுகளும், உதவிகளும் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொல்லப்பட்ட அந்த விடைக்குத்தான் மறுபடியும் வினா வந்திருக்கிறது என்றாலும், கூடுதல் விளக்கத்திற்காகச் சில செய்திகளைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டுக்காரராக மட்டும் இருக்க வேண்டியதில்லை என்ற அடிப்படையில் கருதி, வெளிநாட்டிலும் சிறந்த தமிழ் அறிஞர்கள் இருக்கின்றார்கள். அவர்களும்*

2001 ஜனவரி 23]

அடையாளம் கண்டு சிறப்பிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில், சில விரிவான திட்டங்களை ஏற்கெனவே செயல்படுத்தியிருக்கிறோம். 1998 ஆம் ஆண்டு கோலாலம்பூரைச் சேர்ந்த முரசு நெடுமாறன் என்பவருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் பாரதிதாசன் விருது வழங்கப்பட்டது. அதுமட்டுமல்ல, 2000 ஆண்டிற்கான திரு.வி.க. விருது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் அறிஞர், சிறந்த தமிழ் அறிஞர்-திறனாய்வாளராக இருக்கின்ற ஒரு பேரறிஞராக விளங்குகிற திரு. கா. சிவத்தம்பி அவர்களுக்கு வழங்கப்பட்டது. அண்மையில் குறள் பீட விருது வழங்கும் விழாவில் குறள் பீடப் பரிசு, கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த சேஷநாராயணன் என்பவருக்கு வழங்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே பல்லாயிரக்கணக்கான பேர் விண்ணப்பித்தாலும் தகுதியுடையவர்கள் என்று பல பேர் கலைமாமணி விருது வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்படுகிறார்கள். அந்தவகையில் வெளிநாடுகளைச் சார்ந்தவர்கள், வெளி மாநிலத்தில் வாழ்கின்ற கலைஞர்களையும் தேடிப்பிடித்து, மொத்தம் 19 பேர்களுக்கு கலைமாமணி விருது வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே புதுவையைச் சேர்ந்த 2 பேர், சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒருவர், பரோடாவில் இருக்கிற ஒருவர், மும்பையைச் சேர்ந்த 4 பேர், புதுடெல்லியைச் சேர்ந்த 6 பேர், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த 4 பேர், திருவனந்தபுரத்தில் இருக்கிற ஒருவர் என்று 19 பேர் சிறப்பு பெற்றிருக்கிறார்கள். எனவே, எல்லை விரிவடைந்து அதேநேரத்தில் எங்கெல்லாம் சிறந்த கலைஞர்கள், எங்கெல்லாம் தமிழ் அறிஞர்கள் இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் உட்படுத்தி, தமிழக அரசு சிறப்புச் செய்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள் - விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. வினா எண் 34, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

34—

சேவை நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்கள்

***6706—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS